**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March - 2018

| juk;:- 12(2019) | Gtpapay; | Neuk;:- 3.00 kzpj;jpahyk; |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :-**

- **இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.**
- **பகுதி I, 25 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.**
  **பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.**
- **பகுதி I மற்றும் பகுதி II ஆகியவற்றிற்குரிய இரண்டு விடைத்தாள்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.**

## gFjp - I

❖ **ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1. புவி மீது இடரீதியான, காலரீதியான நிலத்தோற்றப் பாடுகளை முன்வைப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற உபகரணம்.
   1) படம் 2) தியோடலைற் 3) திசைகாட்டி
   4) வரைபுகள் 5) எண்ணிலக்கத் தரவுகள் ( )

agaram.lk

2. 1 : 50000 என்ற அளவுத்திட்டத்தில் இலங்கை முழுவதனையும் உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட இடவிளக்கப்படத் தாள்களின் எண்ணிக்கை.
   1) 62 2) 72 3) 78 4) 82 5) 92 ( )

3. தரைத்தோற்றப் படத்தின் விசேடமான பண்பு.
   1) புவி மீது காணப்படும் தரைத்தோற்ற வேறுபாடுகளின் இடைத்தொடர்பினை எடுத்துக் காட்டுவது
   2) புவி மீது காணப்படும் பௌதிக, பண்பாட்டு அம்சங்களுக்கு இடையிலான இடைத் தொடர்புகளை எடுத்துக்காட்டுவது.
   3) புவி மீது காணப்படும் நீர்நிலை அம்சங்களுக்கு இடையே காணப்படும் வேறுபாடுகளைத் தொடர்புபடுத்திக் காட்டுவது.
   4) புவி மீது காணப்படும் பயிர்ச்செய்கைப் பரம்பலின் வேறுபாடுகளைக் குறிப்பிட்டு அவற்றிற்கு இடையிலான தொடர்புகளை விபரிப்பது.
   5) புவி மீது காணப்படும் போக்குவரத்து அரசியல் ரீதியான வேறுபாடுகளை இனம் காட்டுவது ( )

4. இலங்கையின் நெல் உற்பத்தி, அபிவிருத்தி என்பவற்றிற்காகத் தயாரிக்கப்பட்ட படங்களின் அளவுத்திட்டம்.
   1) 1: 100,000 2) 1: 50,000 3) 1: 25,000
   4) 1: 10,000 5) 1: 5000 ( )

5. புவியியல் தகவல் முறைமையினை செயற்படுத்த கணணியில் உள்ளீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற மென்பொருளில் (*soft ware*)ஒன்று
   1) தரவு 2) காந்த இறுவட்டு 3) *GRASS*
   4) பயனிகள் (*user*) 5) வருடிகள் (*scanners*) ( )

6. செய்மதிகள் பயணிப்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள அச்சில் பயணிக்கும் செய்மதிகளின் எண்ணிக்கை.
   1) 1   2) 2   3) 3   4) 4   5) 5   (   )

7. பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை (GPS) யின் பிரதான கட்டுப்பாட்டு நிலையம் அமைந்துள்ள ஐக்கிய அமெரிக்காவின் மாநிலம்.
   1) புளோரிடா   2) கொலம்பஸ்   3) ரெக்சாஸ்
   4) கொலராடோ   5) ஜோர்ஜியா   (   )

8. இலங்கை 1 : 50,000 இடவிளக்கப்படத்தில் வீட்டுத்தோட்டம், சிறுவீதி போன்றவற்றைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம்.
   1) பச்சை   2) சிவப்பு   3) மஞ்சள்   4) கபிலம்   5) கறுப்பு   (   )

9. புவியின் தோற்றப்பாடுகளில் பல்வகைமையைக் கற்றல் (Areal Differentiation) என்கின்ற வரைவிலக்கணத்தினை முன்வைத்த அறிஞர்.
   1) கால் ரிட்டர்   2) வொன் கம்போல்ட்   3) ரிச்சட் ஹாட்சோன்
   4) வெகர்னர்   5) டேவிஸ்   (   )

10. புவிமேற்பரப்பிலிருந்து 8 – 16 கி.மீற்றர் வரை பரந்து காணப்படும் மண்டலம்.
   1) மாறன் மண்டலம்   2) படை மண்டலம்   3) இடை மண்டலம்
   4) அயன் மண்டலம்   5) வெப்ப மண்டலம்   (   )

11. சேதன முறையில் உருவான அடையற் பாறைகளில் ஒன்று.
   1) களி   2) மணல்   3) ஜிப்சம்   4) நிலக்கரி   5) சுண்ணாம்புக்கல்
   (   )

12. இலங்கையின் அனுராதபுரம், பொலன்னறுவை, வவுனியா போன்ற வரண்ட வலய மாவட்டங்களில் பரம்பியுள்ள மண்.
   1) செங்கபில லெற்சோல்   2) செங்கபில மண்
   3) செம்மஞ்சல் பொட்சோல் மண்   4) கிரமு சோல்ஸ் மண்
   5) காரமற்ற கபில நிற மண்   (   )

13. கண்டத்தகடு ஒன்றின் கீழ் சமுத்திரத் தகடொன்று அமிழும் போது தோற்றம் பெறுவது.
   1) மலைத்தொடர்கள்   2) தீவுகள்   3) அகழிகள்
   4) மடிப்பு மலைகள்   5) எரிமலை விற்கள்   (   )

14. மியாந்தர் வளைவு, டெல்டா, மலையடி விளிம்பு போன்ற நிலவுருவங்களை உருவாக்கும் தின்னல் கருவி.
   1) காற்று   2) மலைப்பனிக்கட்டியாறு   3) ஓடும் நீர்
   4) தரைக்கீழ் நீர்   5) கண்டப் பனிக்கட்டியாறு   (   )

15. விசுவியஸ், பிஜுஜிமா, ஹெக்லா போன்ற எரிமலைகள் காணப்படும் நாடுகள் முறையே
   1) இத்தாலி, ஜப்பான், ஐஸ்லாந்து
   2) இந்தோனேசியா, ஜப்பான், பிலிப்பைன்ஸ்
   3) இந்தோனேசியா, ஜப்பான், ஐஸ்லாந்து
   4) ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், இத்தாலி
   5) இத்தாலி, இந்தோனேசியா, ஜப்பான்   (   )

16. மலைப்பனிக்கட்டியாற்றின் அரித்தல் காரணமாக உருவாகின்ற நிலவுருவங்கள் முறையே,
   1) வட்டக்குகை ஏரி, கூம்பகச் சிகரம்
   2) தொங்குப் பள்ளத்தாக்கு, வில்வளைவு
   3) குத்துப்பாறை வாற்குன்று, வில்வளைவு
   4) ஓங்கல், அலை வெட்டிய மேடை
   5) தொலினா, உவாலாஸ்   (   )

agaram.lk

17. மண்சரிவினை ஏற்படுத்துகின்ற பௌதிகக் காரணிகளில் ஒன்று.
   1) காடழிப்பு
   2) தாய்ப்பாறை சிதைவடைதல்
   3) உயரமான பிரதேசங்களில் நீரைத் தேக்கிவைத்தல்.
   4) அகழ்வுக் கைத்தொழிலைத் துரிதப்படுத்துதல்.
   5) நிலம் கீழிறங்கல் ( )

18. இடை வெப்ப வலயத்தின் பிரதான படிவுவீழ்ச்சியின் வடிவம்.
   1) தூறல், புகார் 2) பனித்துளிகள், பனிக்கட்டி மழை
   3) பனி, மழை 4) பனி, புகார்
   5) தூறல், மழை ( )

19. சனத்தொகைக் கட்டமைப்பின் பிரதான இயல்புகள்.
   1) வயது, பால் 2) பிறப்பு, இறப்பு 3) பிறப்பு, இடப்பெயர்வு
   4) பால், பிறப்பு 5) இறப்பு, வயது ( )

20. சனத்தொகையில் வயது முதிர்ந்தோரைக் காட்டும் அளவீடு.
   1) சனத்தொகைப் பிரமிட் 2) வயோதிபமடைதல் சுட்டி
   3) குடித்தொகைக் கட்டமைப்பு 4) குடித்தொகைச் சேர்க்கை
   5) பாலின சமூக நிலை ( )

21. புராதன காலத்தில் நாகரிக்குடியிருப்புக்கள் வளர்ச்சியடைந்து இருந்ததாகக் கருதப்படும் மொசப்பதேமியாவின் இரு நகரங்கள்.
   1) மொஹஞ்சதாரோ, ஹரப்பா 2) ஹரப்பா, எரிடு 3) ஊர், ஹரப்பா
   4) ஊர், கலிபன்கள் 5) ஊர், எரிடு ( )

22. இலங்கையில் 125,000 ஆண்டுகளுக்கு முன் குடியிருப்புக்கள் உருவாகியதாகக் கருதப்படும் இடங்களில் ஒன்று.
   1) மினிஹாகல்கந்த 2) மகாநாகுல 3) குருவிட்டபட்டதொம்பலன
   4) பாகியன் கல 5) இபன் கட்டுவ ( )

agaram.lk

23. ஆபிரிக்கா கண்டத்தில் குறைவான நகராக்க மட்டம் கொண்ட நாடுகள்.
   1) புருண்டி, மாலாவி 2) ரியுனியன், லிபியா 3) சூடான், எரித்திரியா
   4) எகிப்து, கொங்கோ குடியரசு 5) தன்சானியா, கென்யா ( )

24. சீனாவில் வளிமாசடைதல் காரணமாக அதிகளவு பாதிக்கப்பட்ட நகரங்கள்.
   1) பீஜிங், டியஜி 2) ஷங்காய், தியான்சன் 3) சூசுஸ்கோ, சென்குடு
   4) பீஜிங், ஷங்காய் 5) டியஜி, ஷங்காய் ( )

25. இலங்கையில் குறைவான நகரமயமாக்கல் மட்டத்தினைக் கொண்ட இரு மாவட்டங்கள்.
   1) முல்லைத்தீவு, மன்னார்
   2) வவுனியா, யாழ்ப்பாணம்
   3) குருநாகல், கேகாலை
   4) பதுளை, மொனராகலை
   5) புத்தளம், குருநாகல் ( )

(25 புள்ளிகள்)

## பகுதி – II

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ ***1 : 50000* அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி வழங்கப்பட்டுள்ளது. அதில் சமவுயரக்கோடுகளின் இடைவெளி $20m$ காட்டப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

***1.***

i. உமக்குத் தரப்பட்ட பிரதேசத்தில் செய்கை பண்ணப்படும் பயிர்கள் மூன்று தருக. *(1.5 புள்ளிகள்)*

ii. a. இப்பிரதேசத்திலுள்ள போக்குவரத்து வீதிகள் மூன்றினைப் பெயரிடுக. *(1.5 புள்ளிகள்)*
b. உமக்குத் தரப்பட்ட பிரதேசம் அமைந்துள்ள வலயம் எது? *(1 புள்ளிகள்)*

iii. இப்பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு நீரினை வழங்குகின்ற இரு மூலகங்களைப் பெயரிடுக. *(1 புள்ளிகள்)*

iv. உமக்குத் தரப்பட்ட பிரதேசத்தின் பரப்பளவு யாது? *(2 புள்ளிகள்)*

v. *1 : 50,000* அளவுத்திட்டத்திற்குரிய நேர்கோட்டு அளவுத்திட்டத்தினை வரைக. *(2 புள்ளிகள்)*

vi. இப்பிரதேசத்தினை ஊடறுத்துச் செல்லும் *A 9* வீதியின் தூரத்தினை கிலோ மீற்றரில் தருக. *(2 புள்ளிகள்)*

vii. இப்பிரதேசத்தில் காணப்படும் நிர்வாக எல்லையைப் பெயரிடுக. *(1 புள்ளி)*

viii. இப்பிரதேசத்தின் நிலப்பயன்பாடு பற்றிச் சுருக்கமாக விளக்குக. *(3 புள்ளிகள்)*

## பகுதி – I

***2.***

i. புவியியல் தகவல் முறைமையின் (GIS) பிரதான கூறுகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

ii. புவியியல் தகவல் தொகுதியின் முக்கிய கூறான தரவுகளின் இருவகைகளையும் தருக. (2 புள்ளிகள்)

iii. *GIS* புவியியல் தகவல் முறைமையின் பயன்பாடு, முக்கியத்துவம் தொடர்பாக இரு காரணிகளைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. *GPS* பூகோள இடநிலைப்படுத்தல் முறைமையின் பயன்பாடுகள் *5* தருக. (5 புள்ளிகள்)

agaram.lk

***3.***

i. a. புவிமேற்பரப்பிலுள்ள பிரதான தகடுகளில் மூன்றினைத் தருக. *(3 புள்ளிகள்)*
b. புவியின் பிரதான எரிமலை வலயங்கள் நான்கினைத் தருக. *(2 புள்ளிகள்)*

ii. தகடுகள் அசைவுக்குட்படுகின்ற மூன்று முறைகளையும் குறிப்பிட்டு அதில் ஒன்றின் செயல் ஒழுங்கு தொடர்பாக விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக. *(5 புள்ளிகள்)*

iii. தகட்டு அசைவினால் ஏற்படும் விளைவுகள் நான்கு குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. *(5 புள்ளிகள்)*

***4.***

i. குடியிருப்பு என்றால் என்ன? *(3 புள்ளிகள்)*

ii. குடியிருப்பு ஒன்றின் அடிப்படைப் பண்புகள் ஐந்தினைக் குறிப்பிட்டு அதில் இரண்டினை விளக்குக. *(6 புள்ளிகள்)*

iii. நகர, கிராம குடியிருப்புக்களின் பண்புகள் மூன்று வீதம் தருக. *(6 புள்ளிகள்)*

***5.***

i. இலங்கையின் குடியிருப்பு வகைகள் மூன்றினையும் தருக. *(3 புள்ளிகள்)*

ii. இலங்கையில் குடியிருப்புக்களின் நவீன போக்குகள் மூன்று தருக. *(3 புள்ளிகள்)*

iii. நகரமயமாதல் செயன்முறையில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக. *(3 புள்ளிகள்)*

iv. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் நகராக்கம் தொடர்பான பிரச்சினை மூன்று குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. *(6 புள்ளிகள்)*




SCALE 1:50 000

agaram.lk